## DEPOSITION OF WITNESS

**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.189/2026**
**Sessions :**
**Deposition of Witness for :PW3, LW9**

| | |
|---|---|
| Name | திரு.தேவதாஸ் |
| Father's/Husband Name | திரு.ஞானசிகாமணி |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 07th day of September, 2026**

**எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள்**

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது சித்தாமுர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. ராஜா என்பவரை எனக்கு தெரியும். அவரின் கையெழுத்தும், கையொப்பமும் நன்றாக தெரியும் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 13.12.2024 அன்று மேற்படி உதவி ஆய்வாளர் திரு. ராஜா என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த சி.எஸ் . ஆர் எண். 1152/2024 , நாள்.12.12.2024 என்ற புகார் மனுவை பார்வையிட்டு நிலைய குற்ற எண்.292/2024. 126(2), 296(பி), 115(2), 118(1), 350(2) BNS ல் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(மேற்படி அந்த புகார் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணி மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. புகார்தாரர் வேதாச்சலம் மற்றும் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 6 வரையான மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான மணி மற்றும் ரமேஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவத்தில் காயம் பட்டவர்களுக்கு சிகிட்சை அளித்த மருத்துவர் திரு. ஜெபஷோரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**மேற்படி மருத்துவர், சாரதி என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது, (வேதாச்சலம் என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இவ்வழக்கில் எதிரிகளான பாலகிருஷ்ணன், சரத்பாபு, ரகு ஆகியோர்களை 13.12.2024 அன்று நேத்தப்பாக்கம் பஸ் டாப் அருகே வைத்து கைது செய்து, மேற்படி எதிரி பாலகிருஷ்ணன் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே பார்வை மகசர் சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்தார். பிறகு 3 எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இவ்வழக்கின் மற்றொரு எதிரியான குணா என்பவர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரிய வந்ததால் அவரை இவ்வழக்கில் எதிரியை நீக்கி நீக்கல் சான்று தாக்கல் செய்துள்ளா. (**மேற்படி நீக்கல் சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கு விசாரணை முடித்து

16.07.2025 அன்றைய தேதியில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

5. இந்த வழக்கை பற்றி எனக்கு நேரடியாக தெரியாத என்றால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். என்னுடைய சக அதிகாரி தவறுதலாக எதிரி மீது கொடுக்கப்பட்ட புகாரை பெற்று சரிவர விசாரரிக்காமல் தவறுதலாக எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. சக அதிகாரி சம்பவம் இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், தவறுதலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கம் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.